

**விற்பனைக்கு**

இந்த மாடுகள் மேய்ச்சலுக்காக வந்தவை அல்ல. விற்பனைக்காக வந்தவை. திண்டுக்கல் ஒட்டன்சத்திரம் அருகேயுள்ள அத்திக்கோம்பையில் ஆண்டுதோறும் மாட்டுச்சந்தை நடைபெறும். இந்தாண்டு விற்பனைக்காக மாநிலம் முழுவதுமிருந்து வரவழைக்கப்பட்ட மாடுகள்தான் இவை.






# சந்தேகப்படும் காதல் கணவர்...

**டியர் டாக்டர்,**

காதலுக்காக பெற்றோர், உறவுகள் என எல்லாரையும் உதறிவிட்டு வந்தவள் நான். இத்தனைக்கும் எனக்கு என் அம்மா என்றால் அவ்வளவு உயிர். நான்கு வருடங்களுக்கு முன்பு, என் கணவரை சந்தித்தேன். பழகினோம். பிடித்திருந்தது. வீட்டார் எதிர்ப்பை மீறிக் கல்யாணம் செய்து கொண்டோம். முதல் 3 வருடங்களை என் வாழ்க்கையின் பொற்காலம் என்றுதான் சொல்ல வேண்டும். நான்காவது வருடம் ஆரம்பித்தது கசப்பு.

திருமணமான புதிதில் அவரது நண்பர்கள் எங்கள் வீட்டுக்கு வருவதும், நாங்கள் அவர்கள் வீடுகளுக்குப் போவதும் அடிக்கடி நடக்கும். திடீரென ஒரு நாள் என் கணவர் சொன்ன அந்தச் செய்தி, என் மேல் இடியாக இறங்கியது. அவரது நண்பர் ஒருவருடன் எனக்குத் தகாத உறவு இருப்பதாகச் சொன்னார். உண்மையில் அப்படி எதுவுமே நடக்கவில்லை. ஆனால், அவரோ அதற்குத் தன்னிடம் சாட்சிகள் இருப்பதாகவும், அது உண்மை என்றும் அடித்துப் பேசினார். எந்நேரமும் என்னைக் கண்காணிக்கிறார். என் சகோதரியுடன் சினிமாவுக்குப் போனால்கூட நான்கைந்து நாட்கள் என்னுடன் பேசுவதைத் தவிர்க்கிறார். நான் அவரை ஏமாற்றுவதை நிறுத்த மாட்டேனாம். அதனால் பிரிந்து விடுவோம் என்றார். அவரது அந்த முடிவை மாற்றியவன் எங்கள் 2 வயதுக் குழந்தை. அவனுக்கு அப்பாவை ரொம்பப் பிடிக்கும்.




நானும் எத்தனையோ முறை அவரிடம் பேசிப் பார்த்துவிட்டேன். அவருக்குத் துரோகம் செய்யவில்லை எனக் கதறிப் பார்த்து விட்டேன். நம்ப மறுக்கிறார். ஆழ்மனதில் அவருக்கு என் மேல் நம்பிக்கை இருப்பது தெரிகிறது. ஆனால், அவரது மூளை மனசு சொல்வதைக் கேட்க மறுக்கிறது. அவரிடம் பேசி, கவுன்சலிங் வரவழைப்பதெல்லாம் நடக்காத காரியம். இப்படியே வாழ்க்கையைத் தொடர்வதிலும் எனக்கு விருப்பமில்லை. எப்போதும் இதே சிந்தனையில், டென்ஷனில் என்னால் இயல்பாக இருக்க முடியவில்லை. பைத்தியம் பிடிக்கிற மாதிரி இருக்கிறது. என் பிரச்னைக்கு என்னதான் தீர்வு?

– எஸ்.கே., சென்னை-5.



''தலைவர் இடைவிடாம பேசிக்கிட்டே இருக்காரு...''
''யாரோட 'இடை'யை..?''
- அனார்கலி, தஞ்சாவூர்.



## அன்புச் சகோதரி,

உண்மையில் சந்தேகம் என்பது என்ன என்பதிலேயே இன்றைக்கு சமுதாயத்தில் பலருக்கும் குழப்பம் நிலவுகிறது. வேலையிடத்தில் சக ஊழியர்களிடம், குடும்பத்துக்குள் உறவுகளுக்குள்... இப்படி எல்லா நிலைகளிலும் இதைப் பார்க்கலாம். அது வெறும் சந்தேகமா, பொறாமையா, நம்பிக்கையின்மையா அல்லது 'பாரானோயா' எனப்படுகிற சந்தேக நோயா... என்பதைப் பொறுத்தே தீர்வுகள் அமையும்.



உறவுச்சிக்கல்களுக்குத் தீர்வு சொல்கிறார் மனநல மருத்துவர் கவுதம் தாஸ்

சந்தேகம் என்பது குழந்தைப் பருவத்திலேயே விதைக்கப்படுகிற ஒரு உணர்வு. தனது உடல் மற்றும் உணர்வுரீதியான நியாயமான தேவைகள் தன் பெற்றோரால் நிறைவேற்றப்படுகிறபோது, ஒரு குழந்தைக்கு அவர்கள் மீதும், தன்னைச் சுற்றியுள்ள மக்கள் மீதும் நம்பிக்கை பிறக்கிறது. தேவைகள் பூர்த்தி செய்யப்படாத பட்சத்தில், அந்தக் குழந்தைக்குள் தன்னைச் சுற்றியுள்ள உலகத்தின் மீதே ஒரு நம்பிக்கையின்மை உருவாகும். வளர்ந்து பெரிதான பிறகும், எல்லோரையும் சநதேகத்துடனேயே பார்க்க நினைக்கும்.

நம்பிக்கையின்மையின் இன்னொரு வெளிப்பாடு பொறாமை. மற்றவர்கள் ஏமாற்றுவார்களோ என்கிற எண்ணம், தன்னம்பிக்கையின்மை, சின்னச் சின்ன இழப்புகளைக்கூட சகித்துக் கொள்ள முடியாதது, தனிமை என எல்லா உணர்வுகளும் இதனுடன் சேர்ந்து கொள்ளலாம். இது நிஜப் பொறாமையாக இருக்க வேண்டும் என்றில்லை. கற்பனையானதாகவும் இருக்கலாம்.

உங்கள் கணவருக்கு உண்டாகியிருக்கிற இந்த திடீர் மாற்றத்தின் பின்னணியிலும் இப்படி ஏதோ ஒன்று இருக்கக் கூடும். தாழ்வு மனப்பான்மை, பாதுகாப்பின்மை கூடவே... எங்கே உங்களை இழந்துவிடுவோமோ என்கிற பய உணர்ச்சி என எல்லாம் சேர்ந்து கொண்டதன் வெளிப்பாடு அது. நீங்கள் குறிப்பிட்டுள்ள விஷயங்களை வைத்துப் பார்க்கும்போது, உங்கள் கணவர் இதையெல்லாம் கடந்து அடுத்த கட்டத்துக்குப் போயிருக்கலாம் என்றும் தெரிகிறது. அதாவது பாரானோயா எனப்படுகிற சந்தேக நோய் அவரைப் பீடித்திருக்கலாம்.

உங்கள் நடத்தையை சந்தேகித்து அவர் சொல்கிற விஷயங்கள், உங்கள் மேல் அவர் வைக்கிற குற்றச்சாட்டுகள் என எல்லாமே அவருக்கு மட்டுமே விளங்கக் கூடிய, அவரது கற்பனையில் மட்டுமே உதிக்கக் கூடியவை. அர்த்தமற்றவை.

இந்தப் பிரச்னையால் பாதிக்கப்பட்டவர்கள் பொதுவாக சிகிச்சைக்கோ, கவுன்சலிங்கிற்கோ வர சம்மதிக்க மாட்டார்கள். ஆனால், சிகிச்சையினால் மட்டுமே குணப்படுத்தக் கூடிய பிரச்னை இது. எப்படியாவது அவரிடம் பேசி, சிகிச்சைக்கு வர வையுங்கள். சிகிச்சையின் மூலம் ஒன்றிரண்டு மாதங்களில் அவரது சந்தேகத்தையும், நம்பிக்கையின்மையையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாம். ஆனால், அதன் பிறகும் சிகிச்சையை தொடர வேண்டியிருக்கும். மனதைத் தளர விடாதீர்கள். வாழ்க்கையில் மாற்றம் வர வாழ்த்துக்கள்.

தொகுப்பு: **ஆர்.வைதேகி**

மேலும் பெண்களுக்குப் பயனுள்ள செய்திகளுக்கு:
http://www.dinakaran.com/ladiesnew




**40** சதவீதம் பேர் படித்தவர்கள் உள்ள ஆந்திர மாநிலம் சரளப்பள்ளி சிறையில், நாட்டிலேயே முதன் முதலாக கால் சென்டர் அமைக்கப்பட்டுள்ளது.

**300** எலி ஒழிப்பு ஊழியர்கள் தேவைப்படும் அளவுக்கு மும்பை மாநகராட்சி மற்றும் புறநகர்ப் பகுதியில் எலிகள் அட்டகாசம் செய்கின்றன.

**25** சதவீத தமிழ்நாடு அரசின் பாடப்புத்தகங்கள் சிவகாசியில் தயாராகின்றன.

**615** கோடி ரூபாய், மாநிலங்களவை உறுப்பினராகி இருக்கும் பெங்களூர் தொழிலதிபர் விஜய் மல்லையாவின் சொத்து மதிப்பு.

**79** தூண்கள் கொண்ட பாம்பன் பாலத்து தூண்களில் விரிசல் ஏற்பட்டுள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

**30** இடங்களில் தாக்குதல் நடத்துவதற்காக இந்தியாவில் புகைப்படம் பிடித்ததாக தீவிரவாதி ஹெட்லி வாக்கு மூலம் தந்திருக்கிறான்.

**182** மாவட்டங்களில் மாவோயிஸ்ட்கள் ஆதிக்கம் இருப்பதாக தெரிவித்திருக்கிறார் மத்திய சட்ட அமைச்சர் வீரப்ப மொய்லி.

**7** கோடி ரூபாய் செலவில் வக்பு வாரியங்களை பலப்படுத்தும் புதிய திட்டத்தை மத்திய அரசு தொடங்கியிருக்கிறது.

**276** வகையான பாம்புகள் நம் நாட்டில் உள்ளன.